# TWO PART TENDER APPLICATION

From

To
The General Manager,
The Vellore District District Co-operative Milk Producers'Union Ltd., Sathuvachari,
Vellore - 632 009.

Sir,

Sub: Two Part Tender for the Deployment of Security personnels for the year 2022 -2024 to Vellore District Co-opMilk Producers' Union Ltd., Vellore – submission of Tender Documents – regarding.

<><><>

Having examined the Two Part Tender document consisting of Part A pertaining to pre-qualification/ technical bid and Part B Commercial bid with price quote. I/We hereby submit all the necessary documents and relevant information for bidding the above mentioned tender.

The application is made by me/us on behalf of ------------------------------ ---------------------------------------------------------------------------------------- in the capacity of ------------------------------------------------duly authorized to submit this two part tender offer.

Necessary evidence admissible in law in respect of authority assigned to me on behalf of the bidding firm is herewith attached.

I / we submit the documents herewith taking into consideration of all the instructions, terms and conditions in the detailed two part tender notice.

I / We understand that the General Manager, Vellore District Co-operative Milk Producers' Union Ltd., Vellore.9 reserves the right to reject any tender offer without assigning any reasons thereof.

I / We hereby agree to hold the tender offer valid for acceptance for a period of 90 days from the date of opening of the Part. II Commercial bid.

Signature of the Applicant
Including title capacity.

(IN BLOCK LETTERS)

Enclosures:

1) Evidence of authority to sign.
2) Latest brouches if any
3) Part. A Pre-qualification –Technical bid in one cover and
   Part. B Commercial bid in another separate cover and again
   put both of them in a larger cover and wax sealed.

*PART. A*

*(Technical Bid)*

*DEPLOYMENT OF SECURITY PERSONNEL AT VELLOREDISTRICT CO.OPERATTIVE MILK PRORS' UNION LTD.,*

*(EVIDENCES SHOULD BE ENCLOSED WHEREVER NECESSARY)*

| | | |
|---|---|---|
| *1* | *Whether the EMD amount remitted* | *Yes / No* |
| *2* | *If so, D.D. No. & Date, Bank on which drawn* | *D.D.No Dated:*<br>*Rs.------------- (Rupees-----------------------------------------------------.)*<br>*Drawn on (Bank)*<br>*Branch*<br>*In favour of*<br>*Payable at Vellore* |
| *3* | *If "No" reasons or documents for EMD exemption enclosed* | *Yes/No* |
| *4* | *Details of incorporation/Registration of the applicant firm* | |
| *5* | *Strength of the Personnel* | |
| *6* | *Among the strength, how many are Ex-Servicemen* | |
| *7* | *Whether the firm is covered under ESI?* | *Yes / No* |
| *8* | *If yes. ESI No. , & details of coverage and last ESI contribution remittance amount and date* | |
| *9* | *No. of persons covered.* | |
| *10* | *If not covered under ESI, the reasons for the same* | |
| *11* | *EPF Registration Number* | *Yes/ No* |
| 12 | If yes, EPF No. details of coverage, last EPF contribution remitted and the number of persons to whom remitted. | |
| 13 | Whether training given to the Security Personnel in Fire fighting? | Yes / No |

SIGNATURE OF THE TENDERER

| | | |
|---|---|---|
| 14 | If yes, details thereof | |
| 15 | First aid Certificate available | Yes / No |
| 16 | Deployment of personnel in Government/Government undertakings and other reputed Private firms etc., (list may be provided) | |
| 17 | Whether Income tax remitted regularly | Yes / No |
| 18 | If so, PAN No. for the year may be attached? | Yes / No |
| 19 | Whether all the statutory obligations are complied with including salary, leave etc., by the firm | Yes / No |
| 20 | Whether uniform and accessories given to the Security personnel. | Yes / No |
| 21 | Whether Previous experience documents enclosed | Yes / No |
| 22 | GST Registration No. and details | |
| 23 | Contract Labour Licence Enclosed | Yes/No |
| 24 | Licence Number to engage in the Business of Private Security Agency obtained from Police Department | |
| 25 | If Yes, Valid Licence copy enclosed | Yes/No |
| 26 | Proof for Income Tax returns filed for 3 years 2018-19, 2019-20 & 2020-21 enclosed | Yes/No |
| 27 | As per the G.O.(2D) No.39 Labour and Employment (J1) dated:19.6.2019. Notification No.II(2)/LE/561/2019 published in Tamilnadu Govt. Gazette dated:10.7.2019 Part.II Sec.2 at Page 663 and 664, the Commercial Bid (Basic and DA) should be furnished with the rate not less than minimum rates of wages. | Yes/No |

SIGNATURE OF THE TENDERER

**வேலூர்மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டறவு ஒன்றியம் லிட்.,**
**நெ.142. ஆற்காடு சாலை. சத்துதவாச்சாரி, வேலூர்-632 009.**

**<><><>**

**நிபந்தனைகளும் விதிமுறைகளும்**

ஒப்பந்தகாலம் பாதுகாவலர்களை பணி அமர்த்தும் நாளிலிருந்து இரண்டு வருடங்கள்

1 பாதுகாப்பு பணிக்கு முன்னாள் ராணுவத்தினர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும். அதற்குரிய சான்றுகள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2 உதவி பாதுகாவல் அலுவலர், தலைமை பாதுகாவலர் மற்றும் பாதுகாவலர்களின் வயது 55 வருடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தலைமை பாதுகாவலர் குறைந்தபட்ச கல்வித்தகுதி 12-ம் வகுப்பு, பாதுகாவலர்கள் குறைந்தபட்ச கல்வித்தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று தமிழ் ஆங்கிலம் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

3 தலைமை பாதுகாவலர் மற்றும் பாதுகாவலர்கள், நல்ல பயிற்சி மற்றும் முதலுதவி பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

4 பணி அமர்த்தப்படும் நேரத்தில் ஒன்றியத்திற்கு சொந்தமான பொருட்களுக்கு சேதமோஅல்லது களவு போனாலோ தங்களது நிறுவனம் முழு பொறுப்பேற்க வேண்டும்.

5 பாதுகாவலர்களுக்கான சலுகைகள் ஒப்பந்த முகமையினால் அளிக்கப்பட வேண்டும்.

6 எல்லா வகை பாதுகாவலர்களுக்கும் டெண்டர்தாரர் விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7 நிர்வாக காரணத்தை முன்னிட்டு விலைப்புள்ளிகளை எந்தவிதக் காரணமின்றியும் ஏற்கவோ (அல்லது) நிராகரிக்கவோ (அல்லது) ஒத்தி வைக்கவோ பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு.

8 டெண்டர்தாரர் செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகை (EMD) ரூ.1.48 லட்சம் General Manager, VDCMPU Ltd. என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும். ஒப்பந்த தொகையில் 5% -ல் பிணை வைப்பு தொகை போக மீதம் உள்ள தொகையை காப்புத்தொகையாக (S.D) பணி ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 10 நாட்களுக்குள் D.D-யாக paid by way of Demand Draft in favour of the General Manager, Vellore District Cooperative Milk Producers' Union Ltd., Sathuvachari, Vellore-9.என்ற பெயரில் ஒன்றியத்தில் செலுத்த வேண்டும். E.M.D., S.D., தொகைகளுக்கு எந்தவிதமான வட்டியும் வழங்கப்படமாட்டாது.

டெண்டர்தாரர் கையொப்பம்

9 பாதுகாவலர்கள் அனைவருக்கும் தேவையான சீருடை, காலணி, தொப்பி இவற்றுடன் முக்கியமாக விசில், கைத்தடி மற்றும் இரவு நேரத்தில் டார்ச் லைட் வைத்திருக்க வேண்டும். இத்தேவைகளை பாதுகாவல் முகமையே வழங்க வேண்டும்.

10 பாதுகாவலர்கள் பணியின் போது உறங்கிக் கொண்டு இருத்தல் கூடாது. மேலும் பாலுகாவலர்கள் மது அருந்தி பணியில் ஈடுபட்டாலோ (அல்லது) கலாட்டா செய்யும் நபராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு தெரியவரின் உடனடியாக அவரை நீக்கிவிட்டு அப்பணியிடத்தில் வேறு நபரை பணியமர்த்த வேண்டும்.

11 பாதுகாப்பு நிறுவனமோ / தனியார் நிறுவனமோ (ஏஜன்ஸி) வேலூர் பால்பண்ணை மற்றும் ஒன்றியத்திற்குட்பட்ட பால் குளிரூட்டும் நிலையம், மில்க் பார்லர் மற்றும் பொது மேலாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் பாதுகாவலர்களை உத்திரவு பெற்ற எண்ணிக்கையில் அமர்த்த வேண்டும்.

12 ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்று முறைப்பணிப்படி பணிபுரிதல் வேண்டும்.அதில்எந்த பாதுகாவலரும் 8 மணி நேரத்திற்கு மேல் பணியில் இருத்தல் கூடாது.

13 பாதுகாவல் முகமை வேலூர் பால் பண்ணை மற்றும் அந்தந்த பால் குளிரூட்டும் நிலையங்களில் பணிபுரியும் பாதுகாவலர்களை தேவையான இடங்களுக்கு மாற்றி அந்தந்தபால் குளிரூட்டும் நிலையங்களின் வளாகத்திற்குள் சுற்றி பார்த்து பாதுகாக்க வேண்டும்.அதாவது பால் லாரிகள் மற்றும் இலகு வாகனங்கள் ஒன்றிய ஊழியர்கள் மற்றும் உள்ளேசென்று, வருபவர்கள் அனைவரையும் பால் பணணை மற்றும் பால் குளிரூட்டும்நிலையங்களின் நுழைவு வாயிலில் பரிசோதனை செய்யபபட வேண்டும். அவ்வாறுசோதனையில் மெத்தனமாக இருந்து ஒன்றியத்திற்கு சொந்தமான பொருட்கள், சாமான்கள்தனி நபர் அல்லது வாகனம் மூலம் வெளியே சென்றாலோ அல்லது செல்வதுகண்டுபிடிக்கப்பட்டாலோ பொருளின் தொகையின் இரு மடங்கு பாதுகாவலர் ஏஜென்சியிடம்வசூலிப்பதுடன் தகுந்த காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

14 பாதுகாவல் முகமையின் ஒவ்வொரு மாத கட்டணப் பட்டியலும் அந்தந்த மாத இறுதியில், சம்மந்தப்பட்ட அலுவலரின் உரிய, சான்றுடன் இவ்வலுவலகத்தில் அடுத்து வரும் பிரதி மாதம் 3-ம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

15 பாதுகாவல் முகமை தன் பாதுகாவலர்களின் செயல்முறைகளை ஒவ்வொரு வாரமும் செய்ய வேண்டும். இது சம்மந்தமாக அறிக்கை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான எந்தவித செலவினத்தையும் ஒன்றியம் ஏற்காது.

16 பாதுகாவல் முகமை இவ்வொன்றியத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தேவையான அனைத்துப் பதிவேடுகளும் (ரிஜிஸ்டர்) வைத்து பராமரிக்க வேண்டும். இறுதியில் அனைத்து தஸ்தாவேஜிகளும் நிர்வாக அலுவலகத்தில் பதிவுக்காக கொடுக்கப்பட வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

17 பாதுகாவலர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் எல்லாவற்றிற்கும் பாதுகாவல் முகமையே பொறுப்பாகும்.

18 மேலும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் என்னென்ன விதிமுறைகள் ஒப்பந்த தொழிலாளர்களுக்குப் பொருந்துமோ அவற்றினை தவறாமல் பாதுகாவல் முகமை நடைமுறைப்படுத்த வேண்டும்.

19 பாதுகாவலர்கள் அனைவரும் பால்பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு மாதத்ததிற்கு ஒரு முறை சூழல் முறையில் மாற்றப்பட வேண்டும். அதனால் ஏற்படும் செலவினங்களுக்கு ஒன்றியம் பொறுப்பாகாது.

20 குறைந்தபட்ட கூலிச்சட்டத்ததின் கீழ் (Minimum Wages Act 1948 & Rules 1953) அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் ஊதியத்திற்கு குறையாமல் ஒப்பந்ததாரர் தனது தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும்.

21 பாதுகாவலர்கள் அனைவரும் பாதுகாவல் முகமையால் இ.பி.எப். மற்றும் இ.எஸ்.ஐ மற்றும் இ.எஸ்.ஐ. போன்ற சட்டப்படியான திட்டங்களில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். பாதுகாவல் முகமையால் அமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கான சொந்த நலன், இ.பி.எப்./இ.எஸ்.ஐ. ஓய்வூதியம் மற்றும் இ.எஸ்.ஐ திட்டங்களுக் கான சந்தாத் தொகைகளை காலதாமதப்படுத்தாமல் உரிய நேரத்தில் செலுத்த வேண்டும்.முகமையி காலதாமத்திற்க்காக இவ்வொன்றியம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது. ஒவ்வொருமாதமும் முந்தைய மாதத்தின் இ.பி.எப்./இ.எஸ்.ஐ. செலுத்திய விவரத்தை தவறாமல் கேட்புப்பட்டியலில் இணைத்து அனுப்ப வேண்டும். இல்லையெனில˚ நிறுத்திவைக்கப்படும்.

22 பாதுகாப்பு பிரிவில் உள்ள அனைத்து பாதுகாவலர்களும் பாதுகாவல் முகமையின் ஊழியர்கள் ஆவார்கள். பாதுகாவலர்களுக்கும், பாதுகாவல் முகமைக்கு ஏற்படுகின்ற எந்த ஒரு பிரச்சினைக்கும் ஒன்றியம் பொறுப்பாகாது.

23 பாதுகாவலர்கள் எவரும் இவ்வொன்றியத்தில் இருக்கின்ற தொழிலாளர் மற்றும் ஊழியர்களின் சங்கத்தின் உறுப்பினராகவோ, சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவோ கூடாது.

24 பாதுகாவலர்களால் இவ்வொன்றியத்தில் பால், பால் உபபொருட்கள் போன்றவைகளுக்கு நட்டம் ஏற்படுமாயின் அதற்குண்டான இவ்வொன்றியம் நிர்ணயிக்கின்ற பணத்தை கட்ட வேண்டும்.

25 தினந்தோறும் பால்பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் பால் எடுத்து வரும் வாகனத்தின் நேரத்தையும் மற்றும் அதே வாகனம் திரும்பி பால் ஏற்றிச் செல்லும் நேரத்தையும் குறிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து பொது மேலாளர் அலுவலகத்திற்கு தினந்தோறும் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

26 ஒப்பந்த காலத்தில் பாதுகாப்பு நிறுவனம் ஏதேனும் விசாரணைக்குட்படுத்தப் பட்டால், ஒப்பந்தக்காலம் முடிவுற்ற பின்னரும், அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டால் அவர்கள் தங்கள் சொந்த செலவில் கோரப்படும் நபர் விசாரணைக்கு வந்து செல்ல முகமை ஏற்பாடு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில்அதற்கான முழு பொறுப்பும் முகமையையே சாரும்.

27 விலைப்புள்ளி படிவத்தில் கோரிய விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும் விலைப்புள்ளியின் அனைத்து பக்கங்களிலும் உரிமையாளர் கையொப்பம் இடவேண்டும். இல்லையெனில் அந்த ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

28 ஒன்றியத்தை கட்டுப்படுத்தும் எவ்வித நிபந்தனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

29 முன் வைப்புத் தொகை இணைக்கப்படாத விலைப்புள்ளி பரிசீலிக்கப்பட மாட்டாது. முன் வைப்புத் தொகைக்கான வரைவோலை தேசியமயமாக்கப்பட்ட (Nationalised Bank) வங்கியிலிருந்து பெறப்பட வேண்டும்.

30 விலைப்புள்ளி திறப்பின்போது நேரில் கலந்து கொள்ள இயலாத முகமையினர், தங்கள் சார்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதிக்கு எழுத்து மூலமான அத்தாட்சி கொடுத்து அனுப்பி வைக்க வேண்டும்.

31 நிர்வாக காரணமாக, ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்கவோ அல்லது குறைக்கவோ பாதுகாவலர்களின் எண்ணிக்கையை கூட்டவோ அல்லது குறைக்கவோ பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு

32 எவ்வித காரணமும் அளிக்காமல் ஒரு மாத காலம் முன்னறிவிப்பு கொடுத்து ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு.

33 இவ்வொன்றியத்தின் நிலை ஆணை மற்றும் விதிமுறைகள் மீறப்படுவதால் ஏற்படும் இழப்பிற்கும் முகமை மற்றும் முகமை பணியாளர்களால் இவ்வொன்றியத்தின் சொத்து மற்றும் தளவாடங்களுக்கு நட்டம் ஏற்பட்டாலோ அந்த நட்டத்தை முகமையிடமிருந்து வசூலிக்கப்படும். இதில் ஒன்றியம் நிர்ணயிக்கும் கட்டணமே இறுதியானது.

34 இவ்வொப்பந்தம் தொடர்பாக ஏற்படும் அனைத்து தகராறுகளும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983-ன் கீழ் துணை பதிவாளர் (பால்வளம்), வேலூர் விவகார எல்லைக்குள் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

35 அலுவலர்களிடம் பெற்ற நிலுவையில்லா சான்றின் பேரில் காப்பு தொகை ஒப்பந்தக்காலம் முடிந்து ஆறுமாதம் கழித்தோ அல்லது ஒன்றிய அவ்வாண்டு தணிக்கை முடிந்த பின்னரோ அதில் எது பிந்தியதோ அதன்படி தான் திருப்பி தரப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

36 குறைந்த கட்டண விலைப்புள்ளி அளித்த முகமை ஒப்பந்தத்திலிருந்து பின் வாங்கினால் செலுத்திய முன்வைப்புத் தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டு ஒன்றிய கணக்கில் சேர்க்கப்படும். ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரர் விலகும் பட்சத்தில் (அல்லது) ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் திருப்தி அளிக்காதபட்சத்தில் பணி ஆணை ரத்து செய்யப்பட்டால் அதனால் ஒன்றியம் மேற்கொள்ளும் மாற்று ஏற்பாட்டினால் ஆகும் அதிகப்படியான செலவினம் நிலுவையிலுள்ள பட்டியல்களிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகையை வசூலிக்க சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் காப்புத்தொகை முழுவதும் திருப்பி வழங்கப்படமாட்டாது.

37 பாதுகாவலர்கள் தொடர்ந்து இரு முறைப்பணி பார்க்க கூடாது. ஒரு முறைப்பணிக்கு மேல் தொடர்ந்து பார்க்கும் பட்சத்தில் அவர் பணி செய்ததற்கு ரூ.500/- தண்டத் தொகையாக வசூலிக்கப்படும்.

38 ஒப்பந்தத்தை ஏற்று நடத்த அனுமதி அளிக்கும் பட்சத்தில் ஒப்பந்த முகமை இவ்வொன்றியத்தில் கிளை உறுப்பினராக (Associate Member) உரிய கட்டணம் ரூ.11/-யை செலுத்தி உறுப்பினராக வேண்டும். இதனால் ஒப்பந்த முகமை இவ்வொன்றியத்தில் எவ்வித உரிமையும் கோர இயலாது.

39 பாதுகாவலர்கள் உரிய நேரத்தில் உரிய இடங்களில் பணிபுரியாவிட்டாலோ அல்லது தேவையைவிட குறைவாக பணிபுரிந்தாலோ, ஒவ்வொரு குறைவுக்கும் நாளொன்றுக்கு /நபர் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் தண்டத் தொகையாக பிடித்தம் செய்யப்படும்.

40 பாதுகாவலர்கள் தொடர்ந்து மூன்று முறைப்பணிகளில் பணி செய்தால் அவர்களது ஒரு நாள் சம்பளத்தில் இருந்து இரு மடங்கு தண்ட தொகை வசூலிக்கப்படும்.

41 சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் செய்து கேன்களில் நிரப்பி பால் வழித்தடங்களின் வாகனங்களில் ஏற்றி வரும் கேன்களின் எண்ணிக்கை டிரக் சீட்டின்படி சரியாக உள்ளதா என்று சரிப்பார்த்து உரிய பதிவேட்டில் பதிந்து பொது மேலாளர் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

42 பால் கேன்கள் சம்பந்தப்பட்ட வழித்தட வாகனத்தில் வராமல் தனி நபர் மூலமாகஎடுத்து வரும் பால் கேன்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது.

43 பால் வழித்தட வாகனங்களில் வரும் ஒட்டுநர், கிளினர் தவிர வேறு எந்த நபரையும் பால்பண்ணை / பால் குளிரூட்டும் நிலையங்களில் உள்ளே அனுமதிக்க கூடாது.

44 உள்ளூர் பால் விநியோக வழித்தடங்களில் அனுப்பப்படும் பால் பாக்கெட்டுகள் டெலிவரி நோட்டீஸ் குறிப்பிட்டுள்ள அளவுகளின் படியும் மற்றும் கேட்பாசில் உள்ள அளவுகளும் சரிப்பார்த்து சம்பந்தப்பட்ட பதிவேட்டில் பதிந்து பொது மேலாளர் மற்றும் பிரிவு அலுவலர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

45 தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களிலிருந்து வரும் பால் அளவு சரியாக உள்ளதா என்பதை எடை இயந்திரத்தின் மூலமாக சரிப்பார்த்து பதிவேட்டில் பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

46 “Contract Labour (Regulation&Abolition) Act-ன் கீழ் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.

47 ஒப்பந்த முகமையின் செயலாக்கம் விதிமுறைகள் மற்றும் வரன்முறைகள் நிறைவேற்றுதல் திருப்திகரமாக இல்லையெனில் அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு.

48 ஒப்பந்ததாரர் தனக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ, அதன் மீதான பலன் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவ்வொன்றியத்தின் எழுத்து மூலமான அனுமதியின்றி மாற்றிதரக் கூடாது.

49 ஒப்பந்த முகமை தனது பெயரில் PAN Card Number பெற்று அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும், மற்றும் GST பதிவு செய்த விவரத்தை தெரிவிக்க வேண்டும்.

50 பாதுகாவலர்களுக்கு G.O. (2D) No.39 Labour and Employment (J1) Dt.19.06.2019 notification number II (2) LE/561/2019 Published in Tamilnadu Government Gazette ன்படி Zonal A ல் குறிப்பிட்டுள்ளவாறு minimum rates of wages வழங்கப்பட வேண்டும்.(Basic, DA, EPF,ESI , GST & Others.) இவ்வாறு minimum rates of wages –க்கு குறைவாக அளிக்கப்படும் வணிக விலைப்புள்ளிகள் டெண்டர் நிராகரிக்கப்படும்.

51 தங்கள் நிறுவனம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் ஏற்கெனவே ஒப்பந்தத்தில் பங்கு பெற்று கருப்பு பட்டியலில் இடம் பெற்றிருக்கக்கூடாது அவ்வாறு இருப்பின் ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்படும்.

52 தங்கள் நிறுவனம் Security Service பணிகளுக்காக தனியார், மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் முன்அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

53 தங்கள் நிறுவனத்தின் மூன்று ஆண்டுகளுக்கான (2018 -19, 2019-2020 மற்றும் 2020 -2021 ) வருமான வரி (Income Tax Return) செலுத்தியதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

54 Private Security Agency (Licence to engage in the Business of Private Security Agency) க்கான சான்று காவல் துறையிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

55 இவ்வொன்றிய ஒப்பந்த விதிமுறைகளை பாதுகாவல் முகமை பின்பற்றாமல் செயல்பட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

56 தேவைப்படும் பாதுகாவல் பணியாளர் விவரங்கள்:-

| பணியாளர்கள் தேவைப்படும் இடம் | உதவி பாதுகாவல் அலுவலர் | தலைமை பாதுகாவலர் | பாதுகாவலர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிர்வாக அலுவலகம் | -- | -- | 4 | 04 |
| வேலூர் பால்பண்ணை | 1 | 3 | 15 (ஆண் 12, பெண் 03) | 19 |
| ஆம்பூர் CC | -- | -- | 03 | 03 |
| கொடக்கல் CC | -- | -- | 03 | 03 |
| வேலப்பாடி பார்லர் | | | 01 | 01 |
| மொத்தம் | 01 | 03 | 26 | 30 |

டெண்டர்தாரர் கையொப்பம்

57 உதவி பாதுகாவல் அலுவலர், தலைமை பாதுகாவலர் மற்றும் பாதுகாவலர்களுக்கான பணி ஆணை ஒரே நிறுவனத்திற்கு மட்டுமே வழங்கப்படும்

58 **<u>ஒப்பந்த புள்ளியை பூர்த்தி செய்யும் முறை:</u>**

ஒப்பந்தப்புள்ளி படிவம் Part A –ல் அதில் கோரிய விவரங்களை/ ஆவணங்களை முழுமையாக பூர்த்தி செய்து / இணைத்து கையொப்பமிட்டு அதனை உறையில் வைத்துஉறையின் மீது " Tender for the Deployment of Security Personnel at Vellore District Co-operative Milk Prods.' Union Limited, Pre-Qualification / Technical Bid-Part A என்று எழுதி மூடி அரக்கு முத்திரையிட வேண்டும்.

Part. B – படிவத்தில், அதில் அவர்களது விலைப்புள்ளியை இனம் வாரியாக குறிப்பிட்டு முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அதனை உறையில் வைத்து அந்த உறையின் மீது Tender for the Deployment of Security Personnel at Vellore Dist. Coop. Milk Prods.' Union Ltd., Commercial Bid." Part.B எனக் குறிப்பிட்டு, இரண்டு உறைகளையும் சேர்த்து மூன்றாவது பெரிய உறையில் வைத்து மூடி அரக்கு முத்திரையிட்டு உறையின் மீது "Tender for the Deployment of Security Personnel at Vellore Dist. Coop. Milk Producers' Union Ltd., எனக் குறிப்பிட்டு அதனை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் வந்து சேருமாறு சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கையின்றி தள்ளுபடி செய்யப்படும். Part A, Technical Bid மற்றும் Part.B- Commercial Bid ஆகிய இரு பாகங்களில் உள்ள அனைத்து பக்கங்களிலும் ஒவ்வொரு பக்கத்தின் கீழும் அனுமதிக்கப்பெற்ற ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முத்திரையுடன் தவறாமல் ஒப்பமிட வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

# PART B

# COMMERCIAL BID

THE VELLOREDISTRICT CO.OPERATIVE MILK PRODUCERS' UNION LIMITED, SATHUVACHARI, VELLORE-9

The Tenderer are requested to quote the rates on the basis of G.O.(2D) 39 Labour and Employment (J1) Dated:19.6.2019 Notification No.II (2)/LE/561 /2019 Published in Tamilnadu Gazette Dated:10.7.2019 Part.II Section 2 at page 663 and 664 .

SCHEDULE FOR SECURITY CONTRACT:

(Period for two years from the date of engagement.)

Furnish the rate quoted for each category as follows: -

| Name of the Post | No. of persons required | Unit rate/month(including leave/ Off reserve) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | Basic (Rs.) | DA (Rs.) | EPF (Rs.) | ESI (Rs.) | Total (1-4) Rs. | Service Charge Rs. | Total (5+6) Rs. | GST Rs. | Grand Total (7 -8) Rs. | Total Amt. in words |
| Asst. Security Officer | 1 | | | | | | | | | | Rupees ……………………………………………………………… ……………………………………………………….only) |
| Head Guard | 3 | | | | | | | | | | Rupees ……………………………………………………………… ……………………………………………………..only) |
| Security Guard | 26 | | | | | | | | | | Rupees ……………………………………………………………… ……………………………………………………..only) |
| Total | 30 | | | | | | | | | | |

Note:

1)Rate should be quoted both in numbers and words If any discrepancies noticed lowest among them only will be considered

2)PF & ESI should be calculated as per applicable act.

SIGNATURE OF THE TENDERER